# ஆனாலும், நீங்கள் அதற்காக என்னிடம் கேட்க வேண்டும்



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

13. இயேசு ஒருமுறை ஏன் இங்கே நின்று கொண்டு, அறுவடையின்மேல் அக்கறை கொண்டார்... அவர் அறுவடையின் ஆண்டவராக இருந்தார் என்று எத்தனை பேர் விசுவாசிக்கிறீர்கள்? நிச்சயமாக, நாமெல்லாரும் விசுவாசிக்கிறோம். அவர் அறுவடை யின் மேல் அக்கறை கொண்டவராய், "அறுவடையின் ஆண்டவர் தம்முடைய அறுவடைக்கு வேலை யாட்களை அனுப்பும்படி நீங்கள் வேண்டிக்கொள் ளுங்கள்" என்றார். இப்பொழுது, வேறு வார்த்தைகளில் (கூறினால்), "**செய்ய வேண்டும் என்று எனக்கு தெரிந்ததைச் செய்யும்படிக்கு, நீங்கள் என்னிடம் கேளுங்கள்; ஆனாலும், நீங்கள் அதற்காக என்னிடம் கேட்க வேண்டும்.**" "**நீங்கள் விண்ணப் பம் செய்யாதிருக்கிறபடியினால், உங்களுக்கு சித்திக்கிறதில்லை**" என்று சொல்லியிருக்கிறார். அது சரிதானா? "***நீங்கள் விசுவாசியாத காரணத்தி னால், நீங்கள் கேட்பதில்லை.***"

14. ஒரு தீர்க்கதரிசி ஒருமுறை ஒரு குச்சியை அல்லது ஒரு அம்பைத் தன்னுடைய கையில் வைத்திருந்து, அவன் அந்த இராஜாவிடம், "தரையில்

அடியும்" என்றான், உங்களுக்குத் தெரியும். அவன் அதை இரண்டு அல்லது மூன்று முறைகள் மட்டுமே அடித்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள். "நீர் ஏன் அதை இன்னும் அதிக முறைகள் அடிக்கவில்லை?" என்று கேட்டான். **புரிகிறதா? நாமே செய்ய வேண்டிய குறிப்பிட்ட காரியங்கள் உண்டு.**

★★★★★

